### ஆர்.டி.மதன் குமார்- கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் பங்கேற்பு!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம்!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்புரை! படப்பை ஆ.மனோகரன் தலைமை! ப. அறிவொளி முன்னிலை!

காஞ்சிபுரம், நவ. 3-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ப. அறிவொளி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க கிளைக் கழக இளைஞர் அணி மற்றும் புதிய பாக இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் நாளை (04.11.2025- செவ்வாய்க்கிழமை), மாலை 3.00 மணி, தில்லை மஹால், படப்பையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு குன்றத்தூர் (தெ) ஒன்றியச் செயலாளர் / காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ப.அறிவொளி, ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ரா.தீபக் க.பா.ஆடலரசு மா.சே.பிரகாஷ் எல்.சுதாகர் பொன்.இளையபாரதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ. அன்பரசன் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் திருப்பெரும்புதூர் தொகுதி இளைஞர்அணி தேர்தல் மேற்பார்வையாளர் ஆர்.டி. மதன்குமார், திருப்பெரும்புதூர்தொகுதி தேர்தல் மேற்பார்வையாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம் குன்றத்தூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ப.இராமமூர்த்தி, ஒன்றியக் கழக பொறுப்புக்குழு உறுப்பினர்கள் வ.நந்தகோபால், சி.பார்த்தசாரதி, மூ.ராஜேந்திரன், எஸ்.கர்ணன், குமுதா சுமன் டி.லோகநாதன் த.ஏழுமலை என்.வாசு ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் அடங்கியுள்ள மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், புதிதாக நியமிக்கப்பட்ட கிளைக்கழக இளைஞர்அணி நிர்வாகிகள், பாக இளைஞர்அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் வருகைதந்து கூட்டத்தினை சிறப்பித்துடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பு : இளைஞர் அணி தோழர்கள் வெண்சீருடையில் வருகைதர வேண்டும்.

பொருள் : நவம்பர்27 இளையதலைவர்பிறந்தநாள் விழா 2026 சட்டமன்ற தேர்தல் பணி கழக வளர்ச்சி பணி

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாக நிலை முகவர்கள்– BLA2 பாக சமூக வலைதள முகவர்கள்– BDA இளைஞரணி அமைப்பாளர்கள்– BYA ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு SIR செயல்பாடுகள் குறித்து விழிப்புடன் பொதுமக்களை சந்தித்து ஆற்ற வேண்டிய களப்பணிகள் குறித்து பாக முகவர்கள் கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இதில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ. தொகுதி பார்வையாளர் ஒ.ஏ.நாகலிங்கம்,, கே.எஸ். ரவிச்சந்திரன், பகுதி கழக செயலாளர்கள் வே.வாசு, கூ.பீ.ஜெயின் எம்.சி., மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### எஸ்.ஐ.ஆர். விழிப்புணர்வு குறித்து

# இலத்தூர் வடக்கு ஒன்றியக் கூட்டம்!

## கே.எஸ்.கார்த்திகேயன் தலைமையில்

காஞ்சிபுரம், நவ. 3 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், லத்தூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் எஸ்ஐஆர் வாக்காளர் சிறப்பு திருத்த அவசர செய்ய குழு கூட்டம் நெல்வாய் பாளையம் கிராமத்தில் உள்ள சுபம் கன்வென்ஷன் திருமண மண்டபத்தில் நேற்று காலை நடைபெற்றது. ஒன்றிய பொறுப்பாளர் கே.எஸ். ஆர்.கார்த்திகேயன் கலந்து கொண்டு பேசினார்

இதில் பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, ராஜேந்திரன், ஒன்றிய துணைச் செயலாளர் ஏமநாதன் ஒன்றிய மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ரங்கநாதன், துணை அமைப்பாளர் பாரதி பாபு, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட துணை அமை ப்பாளர் முல்லை வாணன், சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பா ளர் சுரேஷ், நிர்வாகிகள் வெங்கடேசன், சுந்தர வடிவழகன், உள்ளிட்ட பாகா முகவ ர்கள் மற்றும் பிஎல்ஏ 2 முக வர்கள் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.




